உ

சிவமயம்




ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்
மாகியம்பதியை வதிவிடமாகவும் கொண்ட

# திருமதி
# மகேஸ்வரி கதிரவேலு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


18.06.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# ஏழாலையூர்
# திருமதி
# மகேஸ்வரி கதிரவேலு
## அவர்களின்
## சிவபதப்பேறு குறித்த
# நினைவு வெளியீடு

**18.06.2006**

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" - திருக்குறள்



ஏழாலையூர்

# திருமதி மகேஸ்வரி கதிரவேலு

அவர்கள்

பிறப்பு:
1933

இறப்பு:
19.05.2006

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விய வைகாசி ஈர்மூன்று
பூண்ட அபரஸப்தமி புகழ் வெள்ளியில்
நற்குணமாது மகேஸ்வரி நானிலம் நீங்கி
பொற்பாதம் இறைவனடி நல்கிய நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எமது
# அன்புத்
# தாயின்
# திருவடித்
# தாமரைகளுக்கு
# இந்நூல்
# சமர்ப்பணம்



மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற்பேசி
அன்புடன் எம்மை வழிநடத்தி
அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும்
இன்முகத்தினளாய்
வையகத்தில் இறுதிவரை
வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வம்
**மகேஸ்வரி கதிரவேலு**
அவர்களின் திருப்பாதங்களுக்கு
காணிக்கையாக
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.



ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

\- குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று 'கின்றேனே.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

# பஞ்ச புராணம்

## தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே.

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக நாயகனை இமையவர்கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே
புகுந்து பவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
“பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க” என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான் புகழ்
நின்று தெங்கும் நிலவி உலகெலாம்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ் வைத்தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உலகெலாம் அன்புமேவி ஒரு குலமாக வாழ்க
கலகமும் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
நலமெலாம் விளைய ஞான ஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்த சோதி இறைவனே போற்றி! போற்றி!!

### சாந்தி

ஓம் குருர் பிரம்மா குரூர் விஷ்ணு குருதேவா மகேஸ்வரா
குரு ஸாக்ஷாத் பரப்பிரஹ்மா தஸ்மை ஸ்ரீ குருவே நம
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# 108 சரணக் கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னி மூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | யைமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப் புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குரு மகனின் குறை தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குரு தட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி சாத்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை தள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேருத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அமுதலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சத்தி பூஜைக் கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா

ஒவ்வொரு நாளும் ஐயனின் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## கட்டளைக் கலித்துறை

## நல்வித்தையும் ஞானமும் பெற

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்றன் விழுத்துணையே.

## உயர் பதவிகள் அடைய

மனிதரும் தேவரும் மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந்
நாளும் பொருந்துகவே.

## பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்று முன்னே
பலகோடி தவங்கள் செய்வார்
மண்அளிக்கும் செல்வமோ பெறு
வார் மதி வானவர்தம்
விண்அளிக்கும் செல்வமும்
அழியா முத்தி வீடும் அன்றோ
பண்அளிக்கும் சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும்
நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்
கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்
பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும்
போது வெளிநிற்கவே.

## நினைத்த காரியம் நிறைவேற

பின்னே திரிந்துஉன் அடியாரைப்
பேணிப் பிறப்பு அறுக்க
முன்னே தவங்கள் முயன்று
கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி
என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற
வாமல்நின்று ஏத்துவனே!

## இகபர சுகங்களைப் பெற

சொல்லும் பொருளும் என நட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்
அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே.

## மெய்யடியார்கள் உறவு கிடைக்க

புண்ணியம் செய்தனமே மனமே
புதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும்
கூடி நம் காரணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணி இங்கே வந்து தம்
அடியார்கள் நடு இருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேல்
பத்ம பாதம் பதித்திடவே.

## பேத புத்தி நீங்க

தவளே இவள் எங்கள் சங்கரனார்
மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும்
ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும்
மேலே இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வம்உ ண்
டாகமெய்த் தொண்டு செய்தே.

## அம்பிகையை நேரில் தரிசிக்க

நாயகி நான்முகி நாராயணி
கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள்
சரணம் அரண் நமக்கே.

## பிறப்பு இறப்பு நீங்க

அரணம் பொருள்என்று அருள்ஒன்று
இலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த
பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற
நாயகிதன் அடியார்
மரணம் பிறவி இரண்டும்
எய்தார் இந்த வையகத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆண்டவன் நிழலில் ஆறுதலடைந்த அமரத்துவமாது

# திருமதி மகேஸ்வரி கதிரவேலு

## அவர்களின் சீரிய சீவிய சரித்திரம்

காப்பு

ஐங்கரனே கணபதியே அகல்ஞான குருவே
திங்கள் பிறை சடைமுடியோன் - சங்கரன்
தாழ் பணிந்து சாற்றிடும் நினைவு மலர்
எங்கும் பரந்தாழ் பதிக.

அலைமகள் நாற்றிசையும் அழகோடரசோச்ச
கலைமகள் பலர் நாவில் பாரதியாய் கொலுவிருக்க
மலைமகள் பலருள்ளத்தில் நிலையாய் வதிந்திருக்க
கலையாத கல்வியும் அழியாத செல்வமும்
நிலையான வளமும் அன்பகலா நெஞ்சமும்
கொண்ட நன்நாடாம் தமிழீழத் திருநாட்டில்,

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலார்"

என்ற திருமூலரின் அருள்வாக்குக்கு அமைய மக்கட் சமுதாயத்துக்குப் பயன்படக் கூடிய நற்பிறவியைப் பெற்றவர் ஒரு சிலரே. காப்பன காத்து, கடிவன கடிந்து தன் வாழ்வை ஒழுங்கான பாதையில் அமைத்துக் கொண்டு என்னேரமும் இறை நாமமும் புன்சிரிப்பும் கொண்டு "மக்கள் சேவையே மகேசன் சேவை" என வாழ்பவரும் ஒரு சிலரே. அத்தகைய சிலரில் ஒருவராக விளங்கியவர்தான் அமரர் மகேஸ்வரி கதிரவேலு ஆவார்.

ஈழத்திருநாட்டில் செந்தமிழும் சைவமும் செழித்தோங்கும் யாழ். நல்பதியின் சிறப்புறு சூழலில் தென்றலும் செந்தமிழில் தெம்மாங்கு பாடும் திங்களும் தீந்தமிழர் மொழியமுதை சுவை கொள்ளும் பைந்தமிழர் பண்பாட்டின் பகர்வுகளாய் பண்புகொள் நற்செய்திறன் களது கோலங்கொண்டு பரிணமிக்கும் இயற்கை அன்னை எழில் ததும்ப ஈன்றெடுத்த வளமார்ந்த மண் ஏழாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சிறந்த பதியாகும். பல கல்வி வல்லாரும் சிந்தனையாளரும் எழுத்தச்சர்களும் மட்டுமன்றி சைவ சித்தாந்த வித்தகர்களும் தவழ்ந்த மண் இது. ஏழு ஆலயங்களால் நிறைந்த இப்பூமி ஏழாலையெனப் பெயர் பெற்றது. ஏழாலை என்ற நூலைத் தந்தவரும் அம் மண்ணின் மைந்தர் நா. முத்தையா அவர்களே. சி.வை. தாமோதரம்பிள்ளை, கல்விக்கடல் மு. கந்தையனார் இம்மண்ணின் சொந்தக்காரர்கள். இவ்வேழாலை பல பிரிவுகளைக் கொண்டது. இவ் ஏழாலைக் கிராமத்தில் சைவ வேளாண் மரபில் வந்துதித்தவர்களே சின்னையா - தங்கம்மா ஆகிய மகேஸ்வரியின் அன்புப் பெற்றோராவர். மகேஸ்வரியின் உடன்பிறப்புக்கள் தியாகராஜா, சரஸ்வதி, கந்தசாமி ஆகியோராவர்.

குறுகுறு நடந்து ஓடியாடி விளையாடிய தம் மகள் மகேஸ்வரி வளர்ந்து அகவை எய்தியதும் தம்மகளை ஏழாலையூர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சேர்த்து கல்வியை ஆரம்பித்து 7ம் தரம் வரையிலே அவர் தமது கல்வியை நிறைவு செய்தார்.

உரிய பருவத்தில் மகேஸ்வரி அவர்களுக்கும் இதே ஊரைச் சேர்ந்த வல்லிபுரம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகன் கதிரவேலு அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர். இவருக்கு பெற்றோர்களின் முயற்சியாலும் அவரது பிரயாசையாலும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் உத்தியோகம் கிடைத்தது. அவரது தொழிற் திறமையாலும் அதிகாரிகளின் நன்மதிப் பாலும் படிப்படியாய் முன்னேறி மேற்பார்வையாளராக பணிபுரிந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்கு இலக்கணம் கூற, பெருமை கூட்ட அனைவருடனும் அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து வந்த கதிரவேலு அவர்கள் கடந்த வருடம் 5.9.2005 இல் இறைவனடி சேர்ந்தார்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அய்யன் வாக்கிற்கியைய வாழ்ந்து வந்த கதிரவேலு - மகேஸ்வரி தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைச் செல்வங்களாக சீவரட்ணம், அரியரட்ணம், ஜெயரட்ணம் என்னும் இரத்தினங்கள் வந்து வாய்த்தனர்.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்பதற்கமையப் பிள்ளைகள் படிக்க வேண்டும்; படித்துத் தொழில் பார்க்க வேண்டும் என்ற இலட்சியம் மிக்கூர மூவரும் கல்வியில இரத்தினமாகப் பிரகாசித்தனர். இவர்களைத் தேடிப் பலர் பெண்பேசி வநதனர். காலமும் நியதியும் கைகூடத் திருமண காலம் வந்தது.

திரு. சீவரட்ணம் அவர்கள் புவனேஸ்வரியைத் திருமணம் செய்து சிவரூபி, லதீபா என்ற இரு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையானர். இப்பிள்ளைகளுடன் கனடாவில் வாழும் சீவரட்ணம் தொழில் பார்க்கிறார்.

இவரது பிள்ளைகள் கணக்கியலும் வணிகம் முகாமைத்துவத் துறையில் பல்கலைக் கழகத்திலே மேற்படிப்பைத் தொடர்கின்றனர்.

திரு. அரியரட்ணம் அவர்கள் சோதிமணி என்னும் மனையாளைக் கைப்பிடித்து தர்ஷினி, சுகந்தினி, நந்தினி, நிமல்சன், கோமதி, ராகினி என்னும் மக்கட் செல்வங்களைப் பெற்றார்.

இளையவரான ஜெயரட்ணம் அவர்கள் உருத்திரா என்பவரைத் திருமணம் செய்து தர்ஷனா, கீர்த்தனா என்னும் பிள்ளைகளைப் பெற்றார். பின்னவர் இருவரும் தாயகத்திலே வதிகின்றனர்.

இவ்வளவு குடும்பப் பாரம்பரியங்ளையும் மகார்ச் செல்வங்களையும் பேரப்பிள்ளைகளையும் பெற்று மனங்குளிர வாழ்ந்த அமரர் பிற்பகுதியில் சுமார் எழுபத்து மூன்றாவது வயதில் இறைவடி எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" 336 குறட்பா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## மக்கள் இரங்கல்

கண்போல எமைப்பேணிப் பாதுகாத்த கருணைத்தாயே!
எங்களது கவலையெனும் கடலுக்குக்கரை காட்டுமம்மா!
மண்மீதில் நீங்கள்தந்த மாண்பால் நாங்கள்
நல்மக்களென வாழ்கின்றோம் எங்களை மறந்துநீங்கள்
விண்புகுந்த செய்திதனை நினைக்க எம்முள்ளங்கள்
வெந்தழலாய் வேகுதம்மா! விம்மி! விம்மி!
எண்ணாத எண்ணமெலாம் எண்ணி வாழ்ந்துவந்த
எங்களுக்கு யார்வந்து ஆறுதல் சொல்வாரம்மா?

## மருமக்கள் இரங்கல்

மாமியென உங்களை நாங்கள் காணவில்லை
மாண்புமிகு தெய்வமென்றே மதித்து வாழ்ந்தோம்
சீமாட்டியாய் வாழ்ந்திருந்து சிறப்புகளை எமக்காற்றி
எங்கள் வாழ்வுயரச் சேவைகள் பலவும்புரிந்து
மெத்தமகிழ்ந்து உளமார அடிக்கடி வாழ்த்தி
வேற்றுமை காட்டாது அன்பதனைச் சொரிந்த
உத்தமியே! வேறொருவர் எங்குடும்பத்தில் உதித்ததில்லை
உங்களாத்மா சாந்தியுற இறைபாதம் துதித்தேறிற்போம்.

## சகோதரர்கள் இரங்கல்

உம்முடனே உடன்பிறந்த உவப்பால் எம்முள்ளத்தே
அளப்பரிய உவகையுற்று வாழ்ந்து வந்தோம்
எம்முடனே ஒருசொல்லும் பேசாதிந்த எழிலுடலை
நீத்தெம்மை மறந்து எங்குசென்று விட்டாய்ஐயோ!
செம்மைநெறி ஒழுகவைத்து சீரியநற் தொண்டுகளை
எமக்காற்றி எங்களது வாழ்வோங்க சேவை செய்தாய்!
இம்மையிலும் மறுமையிலும் சகோதரியாய் இணைந்து
வாழ்கின்ற நல்வரத்தை இறைவனிடம் இரந்தேறிற்போம்.

## பெறா மக்கள் இரங்கல்

பற்றுடன் பாசம்தந்து பண்புடன் பழகுமம்மா
உற்றவெம் அம்மாவே ஒப்பிலா உத்தமியே
கற்றோரும் மற்றோரும் கனம்பண்ண வாழ்ந்தவரே
வற்றாத அன்புடைய வள்ளலே காண்பதெப்போ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் இரங்கல்

அம்மம்மா! என நாங்கள் அழைத்திட்டால்
ஆதரவாய் ஓடிவந்து அன்புமுத்தங்கள் தந்தணைப்பாயே!
தித்திப்பாம் உணவுகளை வாங்கித்தந்து எங்களை
சீராட்டிக் கதைகள் சொல்லித் தருவீரே!
பந்தடித்து விளையாடிப் பாடல்கள் பலவற்றை
சொல்லித்தந்த நாட்களை மறவோம் பாட்டி
சிந்தைமகிழ ஒருதரமேனும் எம்மிடம் திரும்பிவந்து
சிரித்து விளையாடித் திரும்புங்கள் எங்கள்பாட்டி!

## மைத்துனர் மைத்துனிமார் இரங்கல்

மைத்துனியாய் வந்துதித்த மகேஸ்வரியாம் மாண்பார்செல்வி!
உன்பிரிவு எந்நாளும் எம்மனதை வாட்டுதம்மா!
புத்திசொல்ல நல்வழிகாட்ட குற்றங்கள் பொறுத்திட
எமதுவாழ்வின் உயர்வு கண்டு பூரித்திட
மெத்தமகிழ்ந்து உளமார வாழ்த்தி வேற்றுமை
காட்டாது அன்புசொரிந்து மேலோங்க உதவிவந்த
உத்தமியே! உங்களாத்மா சாந்தியுற ஆண்டவனாம்
இறைவனை அனுதினமும் துதித்தே நிற்போம்

## ஊரவர்கள் புலம்பல்

ஊர்மக்கள் உறவுடனே உரையாடி மகிழ்வீரே
அயலாரை எந்நாளும் அன்பாக உபசரிப்பீர்
உயர்வான போதனையை உற்றார்க்கு உரைத்திட்டே
ஊர்மக்கள் உள்ளத்தில் உரமாகி விட்டீரே!

## தேற்றம்

நேற்றிருந்தார் இன்றில்லை உடல் அநித்யம் என்பதுவும்
ஆற்றோடு கடலுக்குள் அமிழ்ந்தமண் திரும்பாததவும்
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என்ற ஔவை வாசகமும்
வாழ்க்கை நிலையாமை தன்னை வகுத்தது கண்டிங்கே
தேற்றம் அடைவதல்லால் செய்வதுண்டோ நிலவுலகில்
எங்கள் செல்வமே! குடும்பக் குலவிளக்கே!
நேற்றுவரை வாழ்ந்தீர் நிமலனடி சேர்ந்தீர்
சாந்தி பெறுக ஆண்டவன் நிழலிலே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு எங்கள் காணிக்கை!

பெற்று வளர்த்து ஆளாக்கி வாழவைத்த அமரத்துவ தம்பதிகள் கதிரவேலு மகேஸ்வரி



பிறப்பு:
1922

இறப்பு:
05.09.2005



பிறப்பு:
1933

இறப்பு:
19.05.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு

## திருமதி மகேஸ்வரி கதிரவேலு

அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து எங்கள் இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

தமிழீழம் - மாகியம்பதியில் நடைபெற்ற அன்னாரது இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி முதலியவற்றில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

கனடா - ஸ்காபரோவில் நடைபெற்ற அந்தியேட்டி கிரியைகளில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்துத் தந்த "செல்வா கிராபிக்ஸ்" செல்வா கிருபா அவர்களுக்கும்,

தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் குடும்பத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

அமரத்துவ தம்பதிகள்
சின்னையா + தங்கம்மா

அமரத்துவ தம்பதிகள்
வல்லிபுரம் + அன்னப்பிள்ளை

அமரர் சுப்பிரமணியம் + நாகம்மா

**மகேஸ்வரி** ↔ கதிரவேலு

தியாகராசா + சந்திரா
சரஸ்வதி + செல்வரட்ணம்
கந்தசாமி + ராணி

சீவரட்ணம் + புவனேஸ்வரி
- சிவரூபி
- லதீபா

அரியரட்ணம் + சோதிமணி
- தர்ஷினி
- சுகந்தினி
- நந்தினி
- நிமல்சன்
- கோமதி
- ராகினி

ஜெயரட்ணம் + உருத்திரா
- தர்ஷனா
- கீர்த்தனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா உபதேசம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்
அதுவே வேறொருவருடையதாகும்
"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Selva Graphics 416-724-8315